சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 97/2019

**PW1 முத்துசாமி** 30.01.2026

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்து சமயத்தில் நானும் எனது மனைவியும் பொள்ளாச்சி பாலக்காடு ரோட்டில் இரு சக்கர வாகனத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து கொண்டிருந்தோம் என்றால் சரிதான். நான் ஓட்டி வந்த ஸ்கூட்டரின் பதிவெண் என்னவென்று கேட்டால் TN 41 AH 5442 ஆகும். அந்த வண்டி யாருக்கு சொந்தமானது என கேட்டால் எனக்கு சொந்தமானது. விபத்து பொள்ளாச்சி ஸ்டேட் பேங்க் முன்பு நடந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் அதிகமான மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் பேருந்தை வேகமாக ஓட்டி வர முடியாது என்று சொன்னால் சரியல்ல அவர் வேகமாக தான் ஓட்டி வந்தார். பேருந்து வேகமாக ஓட்டி வந்து எனது ஸ்கூட்டரின் முன்புறத்தில் மோதவில்லை என்றால் சரிதான், எனது ஸ்கூட்டரின் முகம் பார்க்கும் கண்ணாடி மீது மோதி அதன் காரணமாக எனது மனைவி பேருந்திற்குள் விழுந்து விட்டார். உண்மையாகவே விபத்து அவ்வாறு நடக்கவில்லை என்றும், என்னுடைய கவனக்குறைவின் காரணமாக தான் விபத்து நடந்தது என்றால் அது சரியல்ல. விபத்து சமயத்தில் எனது மனைவிக்கு சுமார் 65 வயதிருக்கும் என்றால் சரியல்ல 57 வயதிருக்கும் எனது மனைவியின் வயது 57 வயது என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனது மனைவியின் பிரேத பரிசோதனையின் அறிக்கையில் எனது மனைவியின் வயது 60 என இருக்கும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் எனது மனைவி

டெய்லர் வேலை செய்வதை பொறுத்து ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, Dress Making படிப்பு முடித்ததாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். எனது மனைவி டெய்லர் கடை வைத்து எந்த வருமானமும் பெறவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. மனுதாரர்கள் யாரும் எனது மனைவியின் வருமானத்தை நம்பி இருக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. விபத்தே எனது கவனக்குறைவால் தான் நடந்தது என்ற காரணத்தினால் 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றால் சரியல்ல. இந்த மனு 2 ம் எதிர்மனுதாரக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி